## (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

ஓ.எஸ்.எண்.159/2022 நாள்.23.02.2026

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காசி | தொழில் | |
| த. பெ./க.பெ. | வெங்கடேசன் | சாதி | |
| கிராமம் | சத்தியமங்கலம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 65 |

**வா.சா.1**

### குறுக்கு விசாரணை

எனக்கு எழுத படிக்க தெரியாது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் தான் சொன்னேன். அதை எனக்கு படித்து காண்பித்தார்கள். எனக்கு 2 திருமணம் நடந்தது. முதல் மனைவி பெயர் சாந்தி. அவர் தற்போது உயிருடன் உள்ளார். அவர் மூலம் இந்திரா, பிரகாஷ் மற்றும் பிரியா ஆகிய பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் மூவரும் இந்த வழக்கின் 2 முதல் 4 வாதிகள். எனக்கும் சாந்திக்கும் இடையே 1988 ம் ஆண்டு திருமணம் நடந்தது. சாந்தியிடம் விவாகரத்து கோரி நான் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. இதுநாள் வரை சாந்தி எனக்கு சட்டப்பூர்வமாக மனைவி என்றால் சரியல்ல. நான் சிறுவயது முதல் டைலர் வேலை செய்தேன். தற்போது விவசாயம் செய்கிறேன். எனது தொழிலில் எனக்கு ஜீவணம் செய்யும் அளவுக்கு தான் வருமானம் வருமா என்றால் அதிகமாகவும் வரும். வழக்கு சொத்திற்கான பட்டா எண். 265. சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் நினைவில்லை. முதல் மனைவி உயிருடன் இருந்தபோதே நிர்மலா என்பவரை 1995-ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டேனா என்றால் ஆமாம். என் முதல் மனைவி சாந்தி 2018 முதல் 2021 வரை கூட்டுறவு சங்க தலைவராக இருந்து வந்தார் என்றால் சரிதான். அந்த காலத்தில் சுமார் 2 கோடியே 37 லட்சத்து 82 ஆயிரத்து 676 ரூபாய் என் முதல் மனைவியும், சிலரும் கையாடல் செய்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு 5 முதல் 8 அயிட்ட சொத்துக்களை 2018 ம் ஆண்டு கிரையம் வாங்கினேனா என்றால் 1985 யிலும், 2010 யிலும் கிரையம் பெற்றேன். வழக்குரையில் 2018-ம் ஆண்டு கிரையம் பெற்றதாக ஒப்புக்கொண்டு தற்போது மறுக்கிறேன்

என்றால் சரியல்ல. 4-ம் பிரதிவாதி செயலுக்காக என்னுடைய சொத்தை 2022ம் ஆண்டு ஜப்திக்கு கொண்டு வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் 3 மாதம் கழித்து தெரிந்து கொண்டேன். 6 ம் பிரதிவாதி அலுவலகத்தின் மூலம் ஏர்ஆர்சி 50/2021, சிஇபி.எண்.7/2021 - 2022 புத்தக எண். 461/2022 பகுதி-83-86 முன்னிலைக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும் முன் 60 நாட்களுக்கு முன்னதாக அறிவிப்பு சார்வு செய்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி மூலம் கையாடல் பணத்தை மீட்க ஜப்தி செய்து முடித்துவிட்ட நிலையில் இநத் வழகககு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.4 ம் பிரதிவாதிக்கும் எனக்கும் சட்டப்படி விவாகரத்து பெறப்படவில்லை என்பதால் அவருக்காக நானும் பொறுப்பு என்றால் சரியல்ல.